

பொய்யாமொழி

ஆசிரியர்_ ர. பாஸ்கரனுர்.

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1	திருவள்ளுவர் ஆண்டு 1981, ஆவணி 15 (31—8—50) வியாழக்கிழமை	மணி 1

உலக ஒற்றுமை.

தன்பெண்டு தன்பிள்ளை சோறுவீடு
சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறியவீணன்

கன்னலடா என்சிற்றூர் என்போருள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரையுள்ளம்
தென்னையுள்ளம் ஒன்றுண்டு தனதுநாட்டுச்
சுதந்திரத்தால் பிறநாட்டைத் துன்புறுத்தல்

ஆயுதங்கள் பரிகரிப்பார் அமைதிகாப்பார்
அவரவர்தம் வீடுநகர் நாடுகாக்க
வாயடியும் கையடியும் வளரச்செய்வார்
மாம்பிஞ்சு யுள்ளத்தின் பயனுங்கண்டோம்

தூயவுள்ளம் அன்புள்ளம் பெரியஉள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றேஎன்றும்
தாயுள்ளம் தனிலன்றே இன்பம்ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே.

வார இதழ். ★ விலை அணு 1.

வாழ்த்துச் செய்திகள்

S. முத்தையா முதலியார்,
மாஜி மந்திரி, மயிலாப்பூர். 23—8—50

ஆசிரியர் எம். பாஸ்கரனாரவர்கள் துவக்கும் 'பொய்யாமொழி' பெரும்பாலரும் கிராமவாசிகளாகிய விவசாயிகளுக்கு அறிவும், பலனும் தரத்தகுந்த கட்டுரைகளும், விவசாய முறைகளும், அவசியமான லௌகிக விஷயங்களும், அடங்கியதாயிருக்கு மென்று தெரிகிறது. இம்மாதிரி வெளியீடுகள் இக்காலத்தில் நம்மக்களுக்கு அவசியம். விவசாயிகள் 'பொய்யாமொழி'யை ஆதரித்து அதிலுள்ள அரிய விஷயங்களைப் படித்து உணர்ந்து இலாப மடைவார்களென்று நம்புகிறேன்.

ஃ ஃ ஃ

A. V. ரமணி,
66, கோடம்பாக்கம் ஹைரோட்,
சென்னை—17. 22--8—1950

ஐயா!

தாங்கள் ஆரம்பிக்கும் "பொய்யாமொழி" வார இதழ் மெய்யாக திராவிடநாட்டில் உள்ள தீயக்கொள்கைகளைத் தீய்த்து; சமுதாயத் துறையிலே உள்ள சாதி மத பேதத்தைச் சாய்த்து; பொருளாதாரத் துரையிலே உள்ள ஆண்டான் அடிமையை அழித்து; அரசியல் துரையிலே உள்ள ஊழலை ஒழித்து; திராவிடநாடு திராவிடருக் காக்கும் நோக்கத்துடன் பழமை இருளை அழித்திட பகுத்தறிவு ஒளி வீசும் என்று மகிழ்ந்து வாழ்க பொய்யாமொழி வாழ்க என வாழ்த்துகிறேன்.

ஃ ஃ ஃ

கி. ஆ. பெ. விசுவநாதம்,
ஆசிரியர்: தமிழர் நாடு,
திருச்சிராப்பள்ளி. 3—7—1981

"பொய்யாமொழி" என்ற நல்ல தமிழ்ப் பெயரைத் தாங்கி ஒரு கிழமை இதழ் ஜெயங்கொண்ட சோழபுரத்திலிருந் வெளிவருவதறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

அது நன்கு வளர்ச்சி பெற்று, பரந்து, விரிந்து, பெருகி நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு செய்ய வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

ஃ ஃ ஃ

C. முத்து ரெட்டியார்,
திருப்பழுவூர். 24—8—50

அன்புடைய நண்பரே வணக்கம்.

தங்களை ஆசிரியராகக்கொண்டு மலரும், இந்தப் பொய்யாமொழி என்னும் பொன் மலரானது, 'பொன் மலர் நாற்ற முடைத்து' என்றபடி நல்ல மணத்தோடு, நம் வட்டத்தில் உலவுமாக. இம்மலர் பன்னலமும் பெற்று பல்லாண்டு வாழ்வதாகுக.

திருக்குறளை தக்க உரைகளைக் கொண்டு தங்கள் பொய்யாமொழியில் வெளியிடுதல் மிக்க பயன்தரும்.

நீங்கள் பொய்யாமொழியை வெளியிடும் சமயம் நல்ல மழைபெய்து வறுமை தொலைந்து, வயிற்றுக்கட்டுப்பாடு ஒழிந்து, அவுன்ஸ் அகன்று, உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் என்ற பண்புக்குறையாமல் நம் மக்கள் மலர்ந்த முகத்துடன் வாழ்வதைக் காண விரும்புகின்றேன்.

ஃ ஃ ஃ

M. R. செல்லப்பர்,
மேலப்பழூர். 21—8—50

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

அனாகரிகமான மூடப் பழக்க வழக்கங்களுக்கு ஆட்பட்டு ஆரியம் விரித்த மதமெனும் வஞ்சக வலையிற் சிக்கிச் சீரழியும் திராவிட சமுதாயம் விழிப்புற்று எழுச்சியுறச் செய்யும் விடுதலை முரசமாக ஒலிக்கட்டும் உங்கள் பொய்யாமொழி.

பொய்யாமொழிக்கு எங்கள் அன்பும் ஆதரவும் என்றென்றும் உண்டு.

வளர்க பொய்யாமொழி.

ஃ ஃ ஃ

S. S. R. சிவகுருநாதன்,
ஜெயங்கொண்டம். 28—8—50

அன்புடைய ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

தாங்கள் 'பொய்யாமொழி' ஆரம்பிக்கப் போவது கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி எய்துகிறேன்.

காற்றின் வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த உலகத்தில், பல துறைகளிலும் பிற்போக்கில் நின்று கொண்டிருக்கும் நம் கிராம வாசிகளுக்கு, தங்களை போன்ற அனுபவமும் ஆற்றலும் கொண்ட ஆசிரியரையுடைய ஓர் பத்திரிகை அவசியம் தேவை.

பன்னெடு நாளாகக் கிராமங்கள் தோறும் சென்று பல துறைகளிலும் மக்களுக்குத் தொண்டாற்றி வந்த தாங்கள் இப்போது பத்திரிகை மூலம் மக்களுக்குச் சேவை செய்ய முன் வந்திருப்பது மிகவும் போற்றற்குறியதாகும்: பிரசங்க மேடைகளில் தங்கள் பேச்சை ஒரு சிலர்தானே கேட்டுப் பயனுற முடிந்தது. இனி தங்களின் அனுபவமும் ஆராய்ச்சியும் நிறைந்த கருத்துகள் பத்திரிகையில் ஒலிக்கட்டும். கிராம மக்கள் படித்து பயனுறட்டும். தங்கள் பத்திரிகை கிராம மக்களுக்குப் பருவத்தில் பெய்யும் மழையேயாகும். பொய்யாமொழி நீடூழி வாழ்க. வணக்கம்.

பொய்யாமொழிக்கு வாழ்த்து.

திருவளர் தெய்வச் சோழர் தலைநகர்
உருவளர் செயங்கொண் டானெனு மூரில்
வாழ்பாற் கரனுல் நடத்தப் பெறுஞ்சீர்ப்
பொய்யா மொழிப்பெயர்த் துய்யப் பத்திரிகை
நாட்டினி லுண்மை ஊக்கம் உறுதி
உழைப்பு முதலிய அடிப்படை யாகக்
கொண்டு மக்கள் மக்களா வாழ்தர
நல்லோ ருரைமிகக் கொண்டுநல் லுலகம்
முற்றுஞ் சுற்றிக் கொற்றவன் வெற்றியும்
மக்கணல் லுறவும் மன்முறை நீதியும்
உழவும் வணிகமும் உழைப்பினர் பண்பும்
கைத்தொழில் வளமும் கல்வியின் பரப்பும்
அறிவியல் கலையும் அனைத்தும் பயன்பெற
தொண்டினி தாற்றிச் சூழ்கடல் வரைப்பில்
வாழிபல் லாண்டு வாழிபல் லாண்டே.

த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை,
ஆதீன வித்துவான்,
திருவாவடுதுறை ஆதீனம்,
கும்பகோணம்.

க. குஞ்சிதபாதம்,
கிராம பெரியதனக்காரர்.

ஜெயங்கொண்டம்,
19--8—50

ஆசிரியர் அவர்களுக்கு.

பொய்யாமொழி வாரப் பத்திரிகை வெளிவரப் போவதை அறிய பெரு மகிழ்ச்சி.

எல்லா துறைகளிலும் பிற்போக்காக உள்ள நம் தாலூகா தலைநகரில் ஆரம்பிக்கப்படும் 'பொய்யாமொழி' நம் தாலூகாவாசிகளுக்கு வாய்ப்புள்ள வழிகாட்டிஎன்பது மட்டல்லாமல், கட்சி சார்பற்றதாய், கல்வி, பொருளாதாரம், விவசாயம், கைத்தொழில் போன்ற பல துறைகளிலும் சமுதாயம் முன்னேற்றம் கான வழிவகுக்க நீடூழி நிலவுவதாகுக.

'பொய்யாமொழி'யின் மூலம் பெருந்தொண்டாற்ற முன்வந்த தங்களுக்கு ஆற்றலும், ஆதரவும் குறையாதிருக்க விரும்புகிறேன்.

ஃ ஃ ஃ

பாத்திர தொழிலாளர் சங்கம்,
ஜெயங்கொண்டசோழபுரம்.

21—8—50

தங்களின் 'பொய்யாமொழி' வார இதழ் தோன்றலறிவிப்புக்கு நன்றி.

MADRAS

எம்போன்ற தொழிலாளர்களின் நலத்தில் நாட்டங்கொண்டு பணியாற்ற தங்களுக்கோர் வாய்ப்பு.

நல்லதிந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாட்டை பண்படுத்த, தாங்கள் தயங்காதிருக்க யானும், என் சங்கத்தாரும் விழைகின்றோம்.

தலைவர், பா. அருணுசல பத்தர்.

ஃ ஃ ஃ

வாழ்க நாடும் தமிழும்.

அ. இ. காதர்கான்,
ஜெயங்கொண்டம்.

29--8—50

தங்கள் பத்திரிகை துவக்க அழைப்பு இதழ் பார்த்து சந்தோஷப்படுகிறேன். தலைநகரில் நூற்றுக் கணக்கான பத்திரிகைகளும், ஜில்லாக்களில் பல பத்திரிகைகளும், தாலூகாக்களில் ஓரிரண்டு பத்திரிகைகளும் இருக்கின்றன. நம் தாலூகா எல்லா வகையிலும் பிற்போக்கான நிலையிலிருக்கின்றதோடு பத்திரிகை இல்லாத குறையும் இருந்தது. அதை நிவர்த்தி செய்ய தாங்கள் முன்வந்துள்ளமை கண்டு நான் மட்டுமல்ல — தாலூகா வாசிகளே சந்தோஷப் படுவார்களென்று நம்புகிறேன்.

தங்கள் பத்திரிகை கட்சி பேதமின்றி பொதுவாக தாலூகாவின் குறைகளை நீக்கவும், தமிழ்த் தாய்க்கு இயன்ற அளவு தொண்டு செய்யவும், நாட்டு முன்னேற்றத்திற்கு மக்களைத் தக்க வழியில் தட்டி யெழுப்பவும் தக்கதோர் கருவியாக பயன்படுமென்று நம்புகிறேன்.

வாழ்க பொய்யாமொழி !

ஃ ஃ ஃ

A. ஆரோக்கியசாமி,
தலைமை ஆசிரியர்.

ஜெயங்கொண்டம்,
20—8—50

" வள்ளுவன் குறள் வையக மெல்லாம்
வாரியிறை யடா தமிழா "

என்ற மொழியை வெறும் வார்த்தை அளவில் சுவைக்காமல் செயல் முறையிலும் சுவைக்கத் தொடங்கி விட்டது இன்றைய தமிழகம். அதனை அவனியில் வாரியிறைக்க அன்பர்கள் பலர் பல வழியைக் கடைப் பிடிக்கின்றனர். அவற்றுள் மிகச் சிறந்த ஒன்று தான், ஆசிரியர் பாஸ்கரனுர் வெளியிடும் " பொய்யாமொழி ". இப்பொய்யாமொழி, இருண்ட வானத்திற்கு இன்ப நிலவு போலும், பாலைவனத்திற்கு பசும் சோலை போலும் எல்லாத் துறைகளிலும் பின்னிழுக்கிய இன்றைய தமிழகத்திற்கு எழுச்சி முரசாகும். மக்கள் இதனைக் கண்ணென மதித்து பயின்று பலனடைவார்களாக.

வாழ்க பொய்யாமொழி.

கவிதை, கட்டுரை, கதை அனுப்பும் அன்பர்கள்
கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

பொய்யாமொழி அலுவ
17, கச்சேரி ரோ
ஜெயங்கொண்

பொய்யாமொழி

வார இதழ்

சந்தா விபரம்

ஆண்டு	ரூ.	3	0	0
ஆறு மாதம்		1	12	0
தனிப்பிரதி		0	1	0

பொய்யாமொழி

ஆசிரியர் ப. பாஸ்கரனார்

கதிர் 1 | 1981, ஆவணி 15 வியாழன் | மணி 1

"அகர முதல வெழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு"

சிறப்பாக, எழுத்துக்கெல்லாம் "அ" முதலாக நின்றதுபோல் ஆதி பகவன் என்றது பல இயற்கை சக்திகளிலும் முதன்மையான வெப்பம், வெளிச்சம் தந்து மற்றைய சாதனங்கள் எல்லாவற்றிற்கும், ஜீவராசிகளின் உற்பத்திக்கும் முக்யத்வம் பொருந்திய (பகவன்) சூரியன் என்ற பொருளை மேற்கொண்டே திருவள்ளுவர் இந்த பாட்டை முதலடியில், முதற் குறளாக அமைத்துள்ளார் என்பது மிகுந்தபொருத்த முடையதாகக் கொள்ளலாம். ஆனால் பின்னர் மற்றைய உரையாசிரியர்கள் இதை ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.

இதுவரை உரை எழுதிய பரிமேலழகரும், மற்றையவரும் உரை கண்டது தங்கள் தங்கள் பின்பற்றிய மதம், கடவுள் வழிபாடுகள் கொண்டு பொருள்களை அமைத்துக் தந்துள்ளார்கள். ஆனால் அவர்களிலேயே ஒருவரையொருவர் ஒத்துக்கொள்ளாது தம், தம் உரையை தம்மைத்தவிர மற்றையவர் ஒத்துக்கொள்வதில்லை.

மதம், சாதி என்னும் சொற்களையே திருவள்ளுவர் திருக்குறளில் எழுதப்படாதபோது எங்ஙனம் [illegible]கை தழுவிய சைவம், வைணவம், பௌத்தம் சமணம் போன்ற பற்பல மதக்கருத்துக[illegible]யும் மனதில் கொண்டு பொருள்காண எண்ணங்கொண்டிருக்க முடியும்? என்பதை நடுநிலைநின்று ஆழ்ந்துசிந்தித்தால் பொருள் மேலே கூறியதுதான், நேர்மையான உண்மையை தன்னுள் அடக்கியதாகும்.

சுதந்திரமும் நாமும்

பெருதற்கரிய பெரும்பேறு பெற்று சுதந்தரமடைந்த நம் நாட்டில் நம்மை நாமே ஆள்வதற்கு வாய்ப்பு கிடைத்து ஆண்டுகொண்டிருக்கிற இந்த நேரத்தில், ஆங்காங்கு ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சம் போன்ற மற்றைய வாழ்க்கையின் குறிக்கோளில் காணப்படும் குறைபாடுகளை ஓரளவு உண்மையானவைகளை மட்டும் எடுத்துக்கூறி மக்களின் தேவைகளும், வாழ்க்கையில் மேம்பாடடைய வேண்டியிருக்கிற முக்கியமான விஷயங்களை அரசாங்கத்தினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எடுத்துக்காட்டி, அவைகளை செய்யும்படி செய்து, ஒழுங்கும், அமைதியும், சத்தியமும் கடைப் பிடித்தொழுக, மக்களை அன்பு முறையில் பண்படுத்தி, மகாத்மா காந்தி அடிகள் போன்ற பல உத்தமர்கள் அரும்பாடுபட்டு, அடிபட்டு, உதைபட்டு, சிறைசென்று தற்செயலாய் திடீரென சுதந்திரம் கிடைக்கும் வாய்ப்பைப் பெற்று அநுபவித்துவருகிற நாம் ஆள்பவர்களுக்கு ஏற்படும் சூழ்நிலையில் தள்ளமுடியாத தாக்ஷண்யத்தாலும், அசந்தர்ப்பம் காரணமாயும் ஏற்பட்டுள்ள சிறு தவறுகளால் நிகழும் கெடுதிகளைக் கொண்டே நம் மக்களிடையே பெரும்பாலான பாமர மக்களுக்கு துன்பம் ஏற்பட்டு அதற்கு காரணம் வெள்ளையன் போய்விட்டதுதானென்றும், அவனே ஆண்டிருந்தால் இவ்வளவு கஷ்டம் அடைய ஏதுவிருக்காது என்றும் நினைத்து சுதந்திரம் என்றால் சுடுபால் கண்ட பூனைபோல் எண்ணி ஒப்புயர்வற்ற நாமடைந்த சுதந்திரத்தை பழித்தல், பழிக்க இடங்கொடுத்தல் தகாது.

மேலும், நம் மக்களில் இன்னும் பெரும்பாலான மக்களுக்காக நன்மைதரும் காரியங்களை செய்வதே தான்பிறந்த நாட்டுக்கும், மக்களுக்கும் பெருமைதரும் செயல் என்று கருதாமல் சுயநலமிகளாய் மாறி, துன்பம் பிறர்க்கு, நல் இன்பம் தமக்கெனும் துஷ்ட மனோபாவம் கொண்டு, கள்ளமார்க்கட்டு, கொள்ளை லாபம் போன்ற துர்நடவடிக்கைகளால் நாட்டிலே பதுக்கல்களும், விலைகளை விஷம்போல் ஏற்றும் செயல்களும் கொண்டு எந்த நாட்டு மக்களின் உழைப்பை சுரண்டுகிறோம் அன்பை மாய்த்து, அறத்தைக் குலைத்து, புவிகெடும் என்பதை எண்ணாமல் சுரண்டி, உண்டு, உப்பி, கொழுத்து வாழுவதால் ஏற்படப்போகும் புகழென்ன? பல குபேரர்களும், செல்வச் சீமான்களும், வாழ்ந்தாலும் மக்கள்நன்மையில் நாட்டமில்லாதவர்களின் பெயரோ, புகழோ, எங்காவது பரவினதா? அவர்களிறந்தபின் அவர்களுடைய கடின சித்தமும், பணம் சம்பாதிக்க பாட்டாளி மக்களை வஞ்சித்த, வஞ்சனையால் வதை

"பட்ட ... ள் அழுத கண்ணீர் கூரிய வாள்" என்பதற்கேற்ப இறந்தபின் மக்களால் தூற்றப்படுவானே தவிர போற்றப்படமாட்டான். மேலும், உயிருடனிருக்கும் போதே செல்வவான்கள், சீமான்களெனப் பட்டவர்கள் நிம்மதியாகவாவது கவலையற்றுவாழ்கிறார்களாவென்றால் அதுவுமில்லை. கெட்ட கருமி என்றும், மக்களை வஞ்சிக்கும் மகா பாதகர் என்று பெயரெடுத்து சேர்த்து வைத்து இறந்தபின் கூட வருவது என்ன? இகழ்ச்சிதானே! பெரியார் ஈ. வே ரா. அவர்கள் ஒரு கதை சொல்லுவார்கள். அதாவது ஒரு தாசி வீட்டில் ஒரு வேலைக்காரி வேலை செய்துகொண்டிருந்தாளாம். அப்போது இறந்து தெருவில் தூக்கிச்சென்ற பிணத்தைக் கண்டு அந்த தாசியானவள் தன் வேலைக்காரியை விட்டு இறந்துபோனவரின் ஆன்மா மோக்ஷத்திற்கு போகிறதா நரகத்திற்குப் போகிறதா என்று பார்த்துவரச்சொன்னாளாம் இதைக்கேட்டுக்கொண்டு திண்ணையில் படுத்திருந்த பலநாள் காஷாயம் தரித்து கடவுளை நோக்கி கர்மகடூரமாய் தவம் செய்திருக்கிறோம் தபசியாகயிருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருந்த அந்தசாமியார் அந்த தாசியின் காலில் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து தாயே நான் நரை, திரை, மூப்பு, ஏற்பட்டும் இன்றையவரையில் உன் வீட்டிலுள்ள வேலைக்காரி தெரிந்துகொண்ட அளவுகூட தெரிந்துகொள்ளாமலிருந்துவிட்டேன் இனி எனக்கு நீயேகுரு, தெய்வம், நீயே சகலமும் ஆகவே என்னை ரக்ஷித்து காப்பாற்றி ஈடேற்று என்று காலைவிடாமல் சாமியார் பிடித்துக்கொண்டாராம் உடனே அந்த தாசியானவள் தான் ஒருநாளைக்கு வேணுமானால் உன்னுடன் உடன் பட ஒப்புக்கொள்ளுகிறேன் என்றும் சாமியாராகிய உங்களைப்போல் உள்ளவர்களை எப்போதும் வைத்துக்கொண்டு ஜீவனம்செய்ய தனக்கு வாழ்க்கைத் தேவைக்கு கட்டுபடியாகாதென்று தன்னுடைய நிலையைஅவள் எடுத்துச்சொல்ல. தாயே என்னுடைய நோக்கம் அதுவல்ல. தெருவில் தூக்கிச்சென்ற பிரேதத்தைக்காட்டி மோக்ஷத்திற்கு போகிறதா நரகத்திற்கு போகிறதா என்று உன்னுடைய வேலைக்காரியைக்கொண்டு பார்த்துவரச் சொன்னாயே. உனக்கு எப்படி தெரியும் மோக்ஷ நரகத்திற்குப் போவது. அவளுக்கு சொல்லிவைத்ததுபோல் எனக்கும் சொல்லிவைக்க வேணுமென்றுதான் நான் உன்னை கோரினேன் என்றார். அவள் அட, பைத்தியக்கார சாமியாரே! இதுகூடவா இன்னும் தெரியாமல் சடைமுடைதாரியாய், நரை திரை, மூப்பு ஏற்பட்டு கஷ்டப்பட்டாய்! அந்தப் பிரேதத்தின்பின்னே கொஞ்சதூரம் சென்றால் இறந்தவரைப்பற்றி நல்ல புண்ணியவான், பசித்திருப்பவரைப் பார்த்து பொறுத்திருக்கமாட்டார். உதவி செய்யும் சிந்தனையுடையவர், எந்த ஏழையும் கஷ்டப்பட சகிக்கமாட்டார். பிறர்கஷ்டம் தன் கஷ்டம்போல் பார்ப்பவன் தர்மவான். யாரையும் கடிந்து பேசியது கிடையாது. இருந்தாலும் இப்பேர்ப்பட்ட புண்ணியவான் இறந்துபோனதினால் இனி ஏழைகள்பாடு கஷ்டம்தான் என்று சொன்னால் அது மோக்ஷத்துக்குப் போகும் என்று வைத்துக் கொள்ளுங்கள், அப்படிக்கில்லாமல் இந்தப் பாவி தொலைந்துபோனான். கருமி, கடின சித்தமுடையவன். ஏழைகளைக் கொடுமைப் படுத்திய கசடன். துன்மார்க்கன். பாவி. தொலைந்தான். இனி ஏழைகள் அந்தப் பக்கம் அஞ்சாமல் செல்லுவார்கள், ராசுபாளையம் மாதிரி குலைப்பான். தொலைந்தானா. சரி. என்று சொல்லிக்கொண்டு மக்கள் சென்றால் அது நரகத்திற்கு போகும் என்று தெரிந்துகொள். இதைக் கூட புரிந்துகொள்ளாத என்னய்யா சாமியார். உலகமே புரிந்துகொள்ளாதசாமியார், மகாசாமியார் தான்போ. எல்லாம் வேஷம் என்று நையாண்டி செய்தாளாம். சாமியார் வெட்கித் தலைகுனிந்து சென்றாராம். அதுபோல் ஐயகோ! என்ன சுகத்தைக் கண்டீர்கள்? பலரும் கள்ளமார்க்கட் முதலைகளென்றும், கொள்ளை லாபப் பேய்களென்றும் தூற்றுவதன்றி என்ன நன்மை உண்டாகும் உங்களுக்கு. நீங்கள், பல உழைப்பாளிகள் கண்ணீர் விட்டு மனம் புண்பட சம்பாதித்து வைத்த உங்கள் செல்வத்தை உங்கள் வார்சாக வரும் மைனர்கள், விபசாரகர்களாய், கண்ட கண்ட பெண்களை கற்பழித்து, களங்கமேற்படுத்திக்கொண்டு, ஊரார் நகைக்க, சிகரட் புகையும், பெட்ரோல் புகையுமாய் புகைத்து மற்றைய துர்நடவடிக்கைகளுக்கும் உபயோகப்படுத்தி ஒழிக்கிறார்களே யென்பதை எண்ணாமல், நீங்களும் புகழடையாமல் கெட்ட பெயரெடுத்து கர்மியெனப் பட்டம் வாங்கியதோடல்லாமல், ஏமாந்த சோணகிரிகளாகி, இழிச்சொல்லும், பழிச்சொல்லும், ஏன் ஏற்றுக்கொள்கின்றீர்கள் என்பதனை சிறிதே எண்ணிப் பார்த்து கள்ளமார்க்கட்டு, கொள்ளைலாபம் போன்ற சமூகத் துரோகமான ஈனச்செயல்களை விட்டொழியுங்கள்.

அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி எவர்க்கு மாற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம் பொய் களவுசூது
சினத்தையும் தவிர்ப் பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ.

"பொய்யாமொழி"யின் நோக்கம்

"குடிசெய் வார்க்கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்"

என்பதற்கேற்ப, பல பெரியோர்களின் ஆதரவையும், அன்பையும், பொருளிகையையும், எதிர்பார்த்து, வியாபார லாபம் கருதாமல், பத்திரிகை விற்பதற்கு வேண்டிய தந்திரங்களில் இன்று கையாளப்படும் முறைகளில் ஒன்றாகிய முக்யத்வம் வாய்ந்தவர்களை கண்டபடி திட்டுவது போன்ற ஈனச்செயலும்,ஆண்களே பெண்களை விபசாரத்துக்குள்ளாக்கி, கெடுதி செய்துவிட்டு, பெண்களின் விபசாரத்தை ஒழிப்பதற்காக ஆரம்பிப்பதாய் சொல்லி, பெண்களை மானமரியாதையற்று. தாய்க்குலத்தை, சகோதர சகோதரிகள், தாய்மார்கள் என்றெண்ணாமல், அவதூறாக எழுதுவதும், அதை வாங்கிப் படிப்பது பெரிய ஆனந்தமாய் கருதும் புன்செயல் செய்யும் காரியங்களை அடக்கி, துடுக்குதனை ஒடுக்காவிடில், காலி செயல்கள் நிறைய ஏதுவாகுமாதலால், அவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்து திருத்த வேண்டுமென்பதும், அரசியலிலே கருத்து வேறுபாடுகள் இருப்பினும், மக்களின் அன்றாட சாதாரண குறைபாடுகளை எடுத்தெழுதி மாகாண, ஜில்லா தலைமை அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தும் முறையில் பொதுமக்களுடைய கருத்துகளுக்கும் இடமளித்தும் உடையார்பாளையம் தாலூகாவானது எல்லா வகையிலும் பிற்போக்கிலிருப்பதோடு மழையில்லையேல் பாலைவனம் போலிருக்கும் நிலையும், குறிப்பாகதமிழ்நாட்டின் நிலையையும், அன்புமுறையில், விவசாயம், நெசவு, மோட்டார் போன்ற மற்ற ஏனையதொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குறைபாடுகளையும், அதை ஊக்குவிக்கும் உரிமையாளர்கள் முதலியவர்கள் போன்ற சகல குறைபாடுகளையும், சத்தியம், நேர்மை தழைத்து, ஒழுங்கு, அமைதி, கட்டுப்பாடுகள் உணர் மக்களாக வாழப்பிறந்த நாம், மக்களுக்கா... செய்யும் கடமையை தெரிந்து, தெ... தூண்டுவதற்கு தூண்டுகோலாகவே...

விவசாயிகளின் இருண்ட வாழ்வு

நம் நாட்டில் விவசாயிகளுக்கு ½ ஏக்கர் முதல் 1, 2, 3 ஏக்கர்வரைநிலமுள்ள 100-க்கு 90குடும்பத்தாரும் விவசாயிகள் தான் 3 முதல் 6—7 ஏக்கர் வரையில் நிலம் உள்ளவர்களில் 5—6 பேர்களும் விவசாயிகள்தான். 7 முதல் 10—15, 20—25 50ஏக்கர்கள்உள்ளவர்களில் 4—5 பேர்களும் விவசாயிகள்தான் நிலம் அதிகமுள்ளவர்களுக்குத்தான் அநேகமாக சேர்ந்தார்ப் போல் நிலமிருக்கும் மற்றையவர்களுக்கு துண்டு துண்டாக 1/16—3/32—1/8—3/16 இப்படியும் பிள்ளைகள் பிறந்து பாகம் பிரித்து ஒவ்வோரிடத்திலும் தனித்தனி துண்டு துண்டாய் நிலமுடையவர்கள் இந்நாட்டில் 100-க்கு 90, 95 பேர் விவசாயி களாகவே, விவசாயத்தை நம்பியே வாழவேண்டிய வகையில் இருந்துவருகிறார்கள்.

அதிலும் கிராமங்களில்தான் இவ்வாறு அதிகம் மேலும் அதிக நிலமுடையவர்கள் வீட்டில் அதிக குழந்தைகள் பிறப்பது கிடையாது. ஏழைகளாயுள்ள குறைந்த நிலமுடையவர்களும், விவசாய கூலிவேலை செய்யும் நிலமற்ற வர்கள் விட்டிலும்தான் குழந்தை குட்டிகளுக்கு குறைவே யிருப்பதில்லை. ஒவ்வொருவர் வீடும் ஒரு சின்ன குசேலர்க ளில்லம் போலத்தானிருக்கிறது. நம் நாட்டில் யாரும் யாரையும் உங்கள் வாழ்வு எப்படி என்று கேட்கமாட்டார்கள் பிள்ளை குட்டிகள் உண்டா என்பதே கேள்வி பிள்ளை குட்டிக ளிருக்கிறது அதற்கு ஒன்றும் குறைவில்லை என்றால் போவுது பகவான் புண்ணியத்திலே நிறைய இருக்கட்டும் என்பதுதான் ஆசீர்வாதம் குழந்தைகள் பாகம் பிரிய பிரிய நிலமற்றவர்கள் ஆனாலும் விவசாய கூலிவேலை தவிர வேறு தொழில்கள் ஒன்றும் தெரியாது மேலும் கிராமாந்திரங்களில் வேறு தொழிலுக்குத்தான் வழி ஏது? அவர்கள் விறகு உடைப்பது முதலியகடினமானதும் வெட்டுவெட்ட, கொத்த இந்ததொழில் கள் தான் அவர்களின் வாழ்வு. வேலைசெய்பவன் ஒருவனானால் 5, 6 பேர்களைக்காப்பாற்றியாக வேண்டியதும் ஒருவனே.

ஆகவே, அவனும் அவன் குடும்ப மக்களும் 3/4—7/8 பட்டினிதான் எப்போதும், உடையோ கந்தல் பொத்தல் கிழிசல் காணாத, தைக்காத இடமிருக்காது. காய்ச்சல் போன்ற கொடுமையானதும், எண்ணத்தொலையாத நோய்களும் குழந்தைகளோ சொரிசிரங்கு, கட்டி முதலிய கொடிய வியாதி கள், தாய் தந்தையர்களோ வறண்ட தலைகள், குழிந்த கண் கள், ஒட்டிய வயிறு, வளைந்த முதுகு, பார்க்குமிடமெங்கு மொரு நீக்கமற நிறைந்த எலும்புக்கூடுள்ள உருவங்களாக (ஏன் தெளிவாய் விளக்கவேண்டுமானால் நடைபிணங்களாக) இருக்கிறார்கள். அதிலும் (உணவு பங்கீடு வந்தாலும் வந்தது) அவர்களுக்காகவே கிராமவாசிகளுக்கு வந்த கொள்ளைநோய் போல் பாபம். உணவு பங்கீடு உண்டாக்கிய அதிகாரிகள் தங்களைப்போன்ற உடலுழைப்பில்லாதவர்களும், ஒரு நாளைக்கு சுமார் 6, 7 தடவைக்கு குறையாமல் பல ஆகாரங் களாக காபிகளாக, டீகளாக, ஸ்வீட்களாக, கூல் டிரிங், புருட்சால்ட், சாத்துகுடி, ஆரஞ்சு, ஆப்பிள், மலைப்பழம் போன்று அடிக்கடி சாப்பிட்டு சோற்றை சுருக்கி சாப்பிட்டு வருமளவு கணக்குபோல் உழைப்பாளிக்கு அதுவும் காலையில் 5 மணிக்கும் மண்வெட்டி, கோடாலி, செம்மட்டி போன்ற ...ங்களைக்கொண்டு கடினமான வேலைசெய்து காலை 10 மணி சுமாருக்கும் பிறகு இரவு 1 வேளையுமாக 2 வேளை ஆகாரம் மட்டும் சாப்பிடும் அவர்களுக்கும் ஒரே அளவாய் உணவு பங்கீடு பிரித்தானது உண்மையிலேயே இந்நாட்டில் பழகி பல கிராமவாழ் மக்கள் உண்ணும் வேளைகளும், வேறு இடைவேளைகளுக்கு வாய்ப்பற்றவர்கள் என்று தெரிந்தும் சலுகைகாட்டி குறைந்தது 16 அவுன்சு தானியமாவது உணவுக்கு கொடுக்காவிடில் உடலுழைப்பால் ஆக்கப்படும் இந்நாட்டு உணவு பெருக்கம் எப்படி ஏற்படும்!

போதாக்குறைக்கு கிராமப் பகுதிகள் (Informel Ration Aria) என்னும் மற்ற முனிசிபாலிடி போன்ற பெரியநகரங்கள் கட்டாய ரேஷன் ஏரியா என்றும் வைத்து அங்கும் உட லுழைப்பு தொழிலாளிகளுக்கு ரேஷன் அளவை அதிகப் படுத்தாமல் 7, 8 வேளை சாப்பிட வாய்ப்புடையவர்களுக்கும் ஒரே அளவு வைத்திருப்பதானது மேலும் நியாயமற்றது.

அதிலும் குறிப்பிட்ட அளவாவது வாரம் பூராவும் கிராமாந்திரங்களில் நீடித்து கிடைக்கிறதா என்றால் அதுவு மில்லை. இதிலோ 1 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு யூனிட்டாம். 1 வயதுமுதல் 12வரையுள்ள குழந்தைகள்தான் அடிக்கடி சோறு தின்றுகொண்டே கீழும் மேலுமிறைத்துக் கொண்டிருக்கும் சிறு குழந்தைகள் அதை தடுக்க முடியாது. நியாயமற்ற முறையில் இந்த உணவு பங்கீடுகள் அமையப் பெற்றிருப்பதானது நியாயபுத்தியுடைய எவர்க்கும் சரியெனப் படாது. இதே நேரத்தில் எப்போதும் பழகாத குருவை அரிசியை எப்படி சாப்பிடுவது இருக்கும் பழய சம்பா நெல்லை கொடுத்துவிட்டு என்று கூப்பாடிடும் மிராசுதார்கள் ஒருபுரம் அதே நேரத்தில் எப்போதும் தின்னாத சோளத்தை எப்படி தின்பது உடல் ஒத்துக்கொள்ளாமல் நோய் நொடிகள் உண்டாகிறது என்ற கூச்சல் மற்றொருபுரம். பெரிய மிட்டா மிராசுகளுக்கு அஞ்சவேண்டிய அளவில் பாலுக்கு சர்க்கரை யில்லை என்ற கூச்சல் காது செவிடுபட ஒலிக்கிறதே தவிர கூழுக்கு உப்பும் ஏன் கூழும்கூட கிடைக்காத நிலைக்கு கூச்சல் குறைவு. கூச்சலிட முடியவில்லை. ஏன் முடியாது; முடியாது என்பதுதான் பதில்.

நாடும் பசிப் பிணியும்.

பா. ஸ்டாலின்

ஐயோ! பசி! என்று அடிக்கடி துன்புறுத்துவது யார்? பெரியோர்களா? இல்லையே குழந்தைகள்தானே! அவர் களுக்கு ஒரு அவுன்ஸ் அரிசி என்றால் போதுமா? சிந்தித்து பார்க்கவேண்டும்.

ஏழை (எலியை) பணக்காரன் (பாம்பு) விழுங்கிக்கொண் டிருப்பதை கண்ட, சமூக சீர்திருத்தவாதி (கீறிப்பிள்ளை) அதை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? எல்லோரும் சேர்ந்துழைக்கவேண்டும். சமரசம் நிலவவேண்டும். பணக்காரர் ஏழையென்ற வித்தியாசம் கூடாது, எல்லோரும் உழுது, பயிரிட்டு வாழவேண்டும். அப்படி இருந்தால்தான் நாட்டில் குழப்பம் ஏற்படாமல் இருக்கும். வருங்கால இளம் சிங்கங்களே! நீங்கள் மேற்சொன்ன முறையை கையாண்டு நாட்டை முன்னேற்றமடைய செய்யுங்கள். வருங்கால இளம் சிங்கங்களே நீங்கள் ஒவ்வொருவரும் இந்நாட்டு மன்னர்க ளென்று எண்ணி உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள்.

4

பலிபீடம்

... ... தங்கையின் எதிர்கால வாழ்வு இருண்டு போவதைப் பற்றி ஏக்கம் அடைவதற்கு பதிலாக; தன் வசதி நிறைந்த வருங்காலத்தை எப்படி எப்படி ... ...

?

அ. வெ. ரமணி

மலர் வனம், மயில் இனம், தேன் கூடு, கரும்புக் காடு, மான் கூட்டம், பழத்தோட்டம் என்று வனிதையர் வர்க்கத்தைப் பார்த்து வர்ணிக்கின்றார்களே காவிய கர்த்தாக்கள்; அதுபோல் அவ்வளவு வர்ணனைக்கும் அருகதையுடையவளாய் இருந்தாள் சிங்காரி என்னும் அழகி !

எவ்வளவு இருந்ததென்ன ; தங்கத்தில் இழைக்கப்பட வேண்டிய மாணிக்கத்தை — மரகதத்தை — வைடூரியத்தை பித்தளையில் புதைக்கப்பட்டது போல்; கண்ணாடிப் பாத்திரத்தில் பிழியப்பட வேண்டிய கனி ரசத்தை, ஈயமற்ற பாத்திரத்தில் இறக்கப்படுவது போல்; மாதர் கூந்தலில் சூடப்பட வேண்டிய மலரை நுகர முடியாத இடங்களில் வைக்கப்படுவது போல் ; வாலிபன் ஒருவனுக்கு வாழ்க்கைப்படும் வனிதை சிங்காரியை, வயோதிக கந்தப்ப செட்டியாருக்கு கல்யாணமாக்கப்பட்டது !

ஆம் ! கந்தப்ப செட்டியாருக்கு நாணல் பூ போன்ற நரைத்த தலை — திடலின் நடுவே குட்டை இருப்பது போல் ஒட்டிய கன்னங்கள் — கிணற்றடியில் தண்ணீர் கிடப்பது போல் குழி விழுந்த கண்கள் — மூக்குத் தூள் அதிகம் போட்டதால்; அந்நிறத்தோடும் தனக்கென்று தனியே வீசும் மணத்தோடும் சதா ஒழுகும் சளியையுடைய மூக்கும் — வரண்ட குளத்தில் பாளம் பாளமாய் வெடித்துக் காணப்படும் வண்டல் போல் வெடித்து தோல் உரிந்துகொண்டே இருக்கும் உதடுகள் — சொத்தையும், ஊத்தையும் ஒன்றை ஒன்று விடக் கூடுதல் என இயம்பும்படியான பற்கள் — உடல் பற்றி அதிகம் ஏன் ? — சாரைச் சப்பி எறியப்பட்ட சக்கை !

எண்ணுவதற்கு எதுவுமில்லை ! புதுவழி போனால் தீய மொழி வருமென நினைந்து குலப்பெருமையைக் காக்க எண்ணிய மூட பழக்க வழக்கமும் — அவரவர் வினையை அவரவரைத் தவிர எவரும் எதுவும் செய்வதற்கில்லை என்று கொண்ட குருட்டு நம்பிக்கையாலும் — பிள்ளை பேறில்லாத தன் தாய் மாமன் கந்தப்ப செட்டியாருக்கு தங்கை சிங்காரியை கொடுத்தால் அவரது சொத்தை பிறர் வசப்படுத்த முடியாது போகும் என்ற பேராசையும் சிங்காரி அண்ணன் ஆறுமுகத்திடம் இருந்ததால்தான் கிழவர் கந்தப்ப செட்டியாருக்கும் குமரி சிங்காரிக்கும் நடந்திட்டது இக் கோரக் கல்யாணம் !

ஆறுமுகம் போன்ற ஆண் வர்க்கம் செய்யும் இத்தகைய பொருந்தா மணத்தை; சிங்காரி போன்ற பெண் வம்சம் தடை சொல்லும் அளவுக்கு நமது காலம் மாறியும் கருத்தை மாற்றாத இந்து மத தர்மம் இடந்தராதே !

எதிர்பார்த்தது தானே ! சிங்காரிக்கு மாடி வீடு மாதிரிக் கொன்றாய் இருந்தது.........மணவாளன் ? அறுசுவையுண்டி உண்ண அனைத்தும் இருந்தது.........ஆசைநாயகன் ? போக போகத்திற்கான பொருள் இருந்தது ஆனால்......
...புருஷன் ? அதுதானே அவளுக்கு இல்லை ....! கல்யாணம் முடித்த கந்தப்ப செட்டியாருக்கு சாந்தி முகூர்த்தம் செய்து வைப்பதற்கு பதில் அவர் இறந்த எழவிற்கு கடைசியாக கருமாதி நடந்து முடிந்தது !

சிங்காரி தன் கணவன் காலமானதைப் பற்றிக் கவலைப்படவில்லை — தன் புருஷன் போய்விட்டது குறித்து புலம்பவில்லை — தன் மணவாளன் மரித்ததைப் பற்றி மலைக்கவில்லை ! ஏன்......?

(அடுத்த இதழில் முடியும்)

அடுத்து வரும் மணிகளில் தோழர் அ. வெ. ரமணி எழுதிய
உடையார்பாளையம் தியாகி வேலாயுதம் அவர்களின்
கொலை வழக்கைச் சித்தரிக்கக் கூடியதுமான
“ கொந்தளிப்பு ”
என்ற சமுதாய சீர்திருத்த நாடகம் வெளிவரும்.

நீங்கள் பொய்யாமொழியின் சந்தாதாரரா ?

உங்களின் அவசியத் தேவை குறைபாடுகளை இன்றும், என்றும் எழுதி, ஆவன செய்ய முயலும்
நீங்கள் விரும்பும் “ பொய்யாமொழி ”

இல்லையேல் இன்றே சேருங்கள்

ஆசிரியர் கடிதங்கள்.

ஹோட்டல்காரர்கள் சங்கம்,
ஜெயங்கொண்டம். 28—8—50

உணவுப் பொருள்கள் கிடைக்காததாலும் ரேஷன் கார்டுக்கு எதுவும் தரப்படாததாலும் ஹோட்டல்களில் உணவுப் பொருள் எதுவும் உற்பத்தி செய்ய முடியாததால் காபி, டீ, மட்டும்தான் ஹோட்டல்களில் விற்பனை செய்யப் படுகிறது. இதை நீடிக்கவிடாமல் சர்க்கார் உடனடியாக ஆவன செய்ய வேணுமாய் கோருகிறோம்.

காரியதரிசி.

குறிப்பு :—அன்றைய காலை முதல் மத்தியானம் வரையில் ஹோட்டல்களில் டீ, காபி, தவிர வேறு உணவு சாப்பாடு இட்லி தோசை முதலியன கிடைக்காமல் வெளியூர் வாசிகளும் சர்க்கார் குமாஸ்தாக்களும், போலிஸ் ஊழியர்களும், இதரர்களும் உணவுக்குக் கஷ்டப்பட்டார்கள். T. S. O. அவர்கள் ஊரில் இல்லாததால் மாலை 2 மணி சுமாருக்கு இது விபரம் தெரிந்தவுடன் ஸ்ரீ தாசில்தார் ஜனாப் G. ஷேக் தாவுத் B. A, அவர்கள் D. கார்டுகளுக்கு உள்ள யூனிட்டுகளில் அரை பங்கு வீதம் கொடுக்க உத்திரவிட்டிருப்பதாய் தெரிகிறது.-ஆசிரியர்.

ஃ ஃ ஃ

14—8—50 மாலை 4-மணிக்கு ஜெயங்கொண்டசோழபுரம்
திரு. பெரியசாமி தேவர் அவர்கள் தலைமையில்
உழவர்க் கழக காரிய கமிட்டி கூட்டத்தில்
நிறைவேறிய தீர்மானங்கள்.

1. பக்கத்து நஞ்சை பிரதேசங்களில் நடவு அறுவடை செய்து கூலிக்கு நெல் வாங்கிவரும் ஏழை கூலிகளை டி ஜில்லா சவுக்கை போஸ்டில் விடாமலிருப்பதும கூலி நெல் தலை மூட்டைகளை தடுப்பதுமான காரியங்களை கவனித்து டி யார்களை விட்டுவிடும்படி இக் கூட்டம் கோருகிறது

2. உ. தா. கிழக்கு பிருந்தியம். மானுவாரி மழை சென்ற சில வருஷங்களாக பருவ மழையின்மையால் தற்காலிகமாகச் சுற்றி வரவுள்ள நஞ்சை பிரதேசங்களில் 5 மைல் வரை கொள்முதல் ஏரியாவாக சேர்த்து கொள்முதல் செய்ய வேண்டுவென்றும் அதனால் விலை குறைவும் ஏற்பட்டு கள்ள மார்க்கெட்டும் ஒழிந்து பசிக்கொடுமை தாளாமல் வேலையற்ற ஏழைக் கூலி மக்கள் சட்ட மீறுதலான சிறை புக வேண்டிய அவசியமும் குறையுமென்று இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

3. புதுக்குடி பெரிய ஏரியை திருத்தி வெள்ளாற்றில் பெலாந்துரை அணைக்கட்டிலிருந்து கால்வாய் பிரித்து தண்ணீர் தேக்கினால் 12 மைல் நீளமும் சுமார் 3 மைல் அகலமும் ஏற்பட்டு சுமார் 15 மைல் நீளம். 8 மைல் அகலம் உள்ள நிலங்களுக்கு ஏரித் தண்ணீர் பாய வசதி ஏற்படும். டி ஏரிக்கு சிலவிடும் துகையில் பாதி நிலச்சுவான்தார்கள் ஒத்துக்கொடுப்ப தென்றும் பாக்கி பாதியை அரசாங்கம் கிராண்ட் கொடுத்து ஏரியை சீர்திருத்திக் கொடுக்க வேணுமென்றும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

4. பிரயாணிகள் போக்குவரத்து சௌகரியத்துக்காக அரியலூரிலிருந்து மாயவரம் வரை போகவும், மாயவரமிருந்து அரியலூர் வரவுமாக இரண்டு பஸ்களுக்கு டயமிங் கொடுப்பதோடு, ஜெயங்கொண்டமிருந்து மீன்சுருட்டி வழியாக சேத்தியாதோப்பு சிதம்பரத்துக்கு போக வர இரண்டு பஸ்களுக்கு டயமிங் கொடுத்து பிரயாணி வசதிகள் சங்கடத்தை நிவர்த்திக்க வேணுமாய் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

5. உ. தாலூகா சுற்றிலுமுள்ள கிராமங்களின் கால் நடைகளுக்கு வைத்திய உதவியில்லாமலிருப்பதால் ஜெயங்கொண்டத்தில் ஒரு கால் நடை ஆஸ்பத்திரி ஆரம்பித்து கால்நடைகளைக் காப்பாற்ற வேணுமென்று இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

6. தி. ஜி. போர்டில் ஏற்கனவே தீர்மானித்தபடி மீன் சுருட்டியில் L. F. ஆஸ்பத்திரி சீக்கிரம் திறக்க வேணுமென்று ஜில்லா போர்டை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

7. உ. தாலூகாவிற்கு நில அடமான பேங்கு ஒன்று ஏற்படுத்தி விவசாயிகளுக்கு கடன் கொடுத்து விவசாயிகளின் சங்கடத்தை நிவர்த்திக்க வேணும். தவிர. கூட்டுறவு முறையில் நடத்தப்படும் சொசைட்டிகளில் பஞ்சாயத்தார்கள் மெம்பர்களைச்சேர்க்க உரிமையிருப்பது போல் மகாசபைக்கும் அங்கத்தினர் நியமிக்கும் உரிமை நிரந்தரமாக்கும்படி சொசைட்டியின் சட்ட விதிகளை திருத்தி யமைக்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது,

ஃ ஃ ஃ

1. ஜெயங்கொண்டம் பஞ்சாயத்து போர்டில் எரு தழை அடிக்கும் விவசாயிகளின் வண்டிகளுக்கும் வரிபோட்டு, வீடுகளுக்கும் 1 பங்குக்கு சுமார் 2 முதல் 5 பங்கு வரை வரி ஏறியிருப்பது ஏன்? என்பதை எழுத ஆசிரியர் முயற்சிப்பாரா !

2. திருச்சியிலிருந்து விருத்தாசலம் போய்க்கொண்டிருந்த S. I. R. ரயிலை அரியலூருடன் நிறுத்தப்பட்டதினால் ஏற்படும் துன்பங்கள் பல உள்ளதே இதுபற்றி பொய்யாமொழி இதழில் இடங்கொண்டு வருமா ?

3. சர்க்கார் கேணிக்கு சுமார் ரூ. 2000 முதல் 3000மும், விவசாய அபிவிருத்தி மான்ய கேணிக்கு சுமார் ரூ 1000 முதல் 1300க்கு மேல் போகாத நிலையும், ஒரே கிராமத்திலிருப்பது என்ன காரணம் என்பதை பொய்யாமொழி எழுதுமா ?

4. கசங்கிய, எண்ணைப்பட்ட, கிழிந்த கரன்ஸி நோட்டுகளை அவ்வப்போது மாற்றி புதுப்பிக்காமலிருப்பது ஏன் ? என்பதை அரசாங்கத்தாருக்கு எடுத்துக் காட்டி ஆவன செய்யுமா பொய்யாமொழி ?

குறிப்பு: இவைகளுக்கு, பின்னர் தொடர்ந்து அக்குறைகளை அரசாங்கத்தாருக்கு எடுத்துக்காட்டி ஆவன செய்ய முயற்சிக்கும் பொய்யாமொழி. —ஆசிரியர்.

PRINTED BY A. P. RAMASWAMI PILLAI AT THE SRI RATHNA PRESS, (BRANCH) JAYANKONDACHOLAPURAM.
EDITED AND PUBLISHED BY M. BHASKARANAR, 17, KUTCHARI STREET, JAYANKONDACHOLAPURAM.